# காமாஸிகாஷ்டகம்.

## ( ஸ்வாமிதேசிகன் வடமொழியில் அருளிச்செய்தது )

### தமிழாக்கம் : பொய்கையடியான்



வேதத்தின் மிகவுயர்ந்த வடபாகத்திலும்,

வேகமாக ஓடிவரும் சிறந்த நதியுமான ;

வேகவதி என்ற ஆற்றின் தென்கரையில்,

வேதத்தின் நாதன் ஆளரி விளங்குகின்றான் ! 1.

சூரிய, சந்திரன், அக்னி போன்ற சிறந்ததான,

மூன்று கண்களை உடைய எம்பெருமான் ;

கோரிய வரமருளும் நரஸிம்ஹ தாபிநீயின்,

சான்றாக விளங்குபவன் நம் தாபம்தீர்க்கட்டும் ! 2.

ஆகத்தின் கீழ்பகுதி மனிதனின் உருவுடனும்,

மேற்பகுதி சிங்கமுகத்துடன்அழகுற விளங்கிட ;

தாகத்தை இரண்யவதத்தினால் தணித்தவனான,

பாற்கடல் துறந்த சிம்மனை வணங்குகிறேன் ! 3.

லோகத்தில் ஆபத்தின்போது உதவுபவனாய்,

யோகப்பட்டையை அழகுற சாத்தியவனாய் ;

போகமளிக்கும் முக்கண்களையுடையவனாய்,

வேகவதி மணல் மேட்டில் குடிகொண்டவன் ! 4.

மனம் ஒரு இடத்தில் நிலைபெற்று அடங்கிட,
புலன்களை அவற்றின் கட்டுப்பாட்டில் ஒடுக்கி ;
வலம்வருகின்ற புத்தியை ஆன்மாவில் நிறுத்தி,
தினம் பக்தர்க்கு யோகத்தை கற்பிப்பவனவன் ! 5.

வளர்ந்த நகமென்ற வஜ்ராயுதம் போன்றவற்றால்,
அலர்ந்த இரணியனின் மார்பகத்தைக் கீண்டிட ;
கிளர்ந்த இரத்த வெள்ளத்தினால் மிகசிவந்திட்ட,
மலர்ந்த திருக்கரங்களினால் காத்திடவேண்டும் ! 6.

ஒருபுறம் நின்திருமுகத்தில் பிடரிகள் புடைய,
புருவம் நெரிய, கோபம் கண்களில் தெரிந்திட ;
மறுபுறம் கரைபுரண்டிடும் கருணை வெள்ளம்,
சிறுவனுக்காக கண்களில் பெருகிவழிகின்றன ! 7.

என்னை நீ காக்க இருப்பாயாகில் மற்றவர்கள்,
என்ன முயன்று என்ன பயன் ? நீ காக்காமல்;
என்னைக்கைவிட்டால் மற்றவரால் என்னபயன்,
உன்னையறிந்த நானின்று சரணடைகின்றேன் ! 8.

இங்ஙனம் வேங்கடேஸக் கவியால் எட்டுபாடலால்,
துதிக்கப்பெற்ற வேளுக்கையில் அமர்ந்திருக்கும் ;
சிங்க முகத்தான் தன் மகியால் தேவர்களாலும்,
துதிக்கப்படுபவன் நம் குறைகளை நீக்குவானாக ! 9.

**************************************************************************************